11 R

Register No. 11423.

நேரம்: 3.00 மணி

# அரையாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

மதிப்பெண்கள் : 90

பகுதி- I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 14 x 1 = 14

1. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
2. உழத்திப் பாட்டு என அழைக்கப்படுவது அ) குறவஞ்சி ஆ) பள்ளு இ) குறுந்தொகை ஈ) புறநானூறு
3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்
   (i) அ- மட்டும் சரி (ii) ஆ மட்டும் சரி (iii) இரண்டும் சரி (iv) அ-தவறு, ஆ-சரி
4. 'சுதந்திர தாகம்' புதினத்திற்கு 2001ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்
   அ) அ.முத்துலிங்கம் ஆ) ஜெயமோகன் இ) சி.சு.செல்லப்பா ஈ) பிரபஞ்சன்
5. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
6. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, விகுதி ஈ) பகுதி, சந்தி, விகாரம்
7. ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
8. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
9. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்
   அ) சாமுவேல் பெப்பிசு ஆ) ஆனந்தரங்கர் இ) கனகராயர் ஈ) உ.வே.சா
10. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
    அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
11. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது, 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது-
    அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல் இ) நாளிதழ், நன்னகர் வெண்பா
    ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
12. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' – யார் யாரிடம் கூறியது?
    அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம் இ)அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
13. கவிஞர் அப்துல் ரகுமானின், சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்
    அ) பால்வீதி ஆ) நேயர் விருப்பம் இ) பித்தன் ஈ) ஆலாபனை
14. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்
    அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

பகுதி - II பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

பிரிவு – 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கனை, கணை
24. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
25. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) மறுத்து ஆ) விடுத்தல்
26. புதிருக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    பூவின் உறுப்பும் நானே , புன்னகையின் பிறப்பிடமும் நானே – (இதழ், கம்பு)



www.Padasalai.Net

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பயமில்லை ஆ) கற்பொடி

28. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

அ) **Apartment** ஆ) **Straw**

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அறிவில்லாதவன் (அல்லது) தங்கை

30. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

பகுதி-III பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2 x 4 = 8**

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை.
34. வாய்க்காலின் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவன யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2 x 4 = 8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 x 4 = 12**

39. வேற்றுமை அணியை விளக்குக.

(அல்லது)

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

**40.** இலக்கிய நயம் பாராட்டுக.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

- கம்பர்

41. தமிழாக்கம் தருக.

**(i) You must be the change you wish to see in the world.**
**(ii) the weak can never forgive. Forgiveness is the attribute of the strong.**
**(iii) Nobody can hurt me without my permission.**
**(iv) An eye for an eye only ends up making the whole world blind.**

**42.** பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) மின்னுவதெல்லாம் பொன்னல்ல ஆ) வாய்மையே வெல்லும்.

43. பாலைத் திணை (அல்லது) பொருண்மொழிக்காஞ்சித் துறையை சான்றுடன் விளக்குக.

பகுதி-IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **3 x 6 = 18**

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) பாதரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

(அல்லது)

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

பகுதி - V

அடிபிறழாமல் எழுதுக. **4 + 2 = 6**

47. அ) 'அம்ம வாழி தோழி ....' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

ஆ) 'செயல்' என முடியும் குறள்.



www.Padasalai.Net